பக்கங்கள் 17+2

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆடி 27 செவ்வாய்க்கிழமை 12.08.2025 | அதிர்வு 12



## ஜனாதிபதி செப். 1இல் யாழ். விஜயம்

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எதிர்வரும் முதலாம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார் என நம்பகரமான வட்டாரங்களில் இருந்து 02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# 18ஆம் திகதியே ஹர்த்தால்!

## மடு, நல்லூர் உற்சவ விசேட தினங்களைக் கருத்தில்கொண்டு திகதியில் மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்கிறார் சுமந்திரன்

தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கில் அளவுக்கு மீறிய இராணுவப் பிரசன்னத்தை ஆட்சேபித்தும் முத்தையன்கட்டுக்குளத்தில் தமிழ் இளைஞர் ஒருவர் இராணுவ அடாவடித்தனத்தில் உயிரிழந்தமையைக் கண்டித்தும் இலங்கைத் தமிழரசுக் கட்சி நடத்துவதாக அறிவித்துள்ள ஹர்த்தால் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறாது என்றும், அடுத்த திங்கட்கிழமை 18ஆம் திகதியே நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மடு தேவாலய உற்சவம் மற்றும் நல்லூர் உற்சவ விசேட தினங்களைக் கருத்தில் எடுத்து இந்த முடிவு 02



# மன்னாரில் வழிமறிக்கப்பட்டிருந்த காற்றாலைப் பாகங்கள் விடுவிப்பு!

## நேற்றிரவு உருவான பதற்ற நிலைக்கு இன்று நீதிமன்றத்தில் இணக்கத் தீர்வு

(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னாரில் பொதுமக்களின் எதிர்ப்பை மீறி முன்னெடுக்கப்படும் காற்றாலை மின் கோபுரத்தின் பாரிய உதிரிப்பாகங்களை ஏற்றி வந்த வாகனத்தை நேற்று நள்ளிரவுக்குப் பின்னர் தொடர்ந்து இன்று காலை வரை மன்னார் தீவுக்குள் நுழைய விடாமல் பொது மக்கள் வழிமறித்துப் போராட்டம் நடத்தியமையை அடுத்து அங்கு ஏற்பட்ட பதற்ற நிலைக்கு இன்று காலை மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் இணக்கமான தீர்வு காணப்பட்டது.

பாரிய உதிரிப் பாகங்களுடன் மன்னார் தீவுக்குள் நுழைய விடாமல் வழிமறிக்கப்பட்டிருக்கும் ஐந்து பெரிய வாகனங்களையும் தீவுக்குள் நுழைய அனுமதிக்கவும், அதன் மூலம் கொண்டுவரப்படும் உதிரிப்பாகங்கள் 02




# மன்னார் காற்றாலை அமைப்பு விவகாரம்: ஜனாதிபதியுடன் நாளை முக்கிய சந்திப்பு!

(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் காற்றாலை அமைப்பு விவகாரம் பெரும் சர்ச்சைக்குரிய விடயமாக மாறி இருக்கும் சூழலில் அது பற்றி ஆராய்ந்து முடிவெடுப்பதற்காகச் சம்பந்தப்பட்ட தரப்புகள் நாளை புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்தித்துப் பேச இருக்கின்றன.

போராட்டம் நடத்தும் பொது அமைப்புகளின் ஐந்து பிரதிநிதிகள், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிபர், பிரதேச செயலாளர் போன்றோர் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றுகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் மன்னாருக்குப் பிரசாரத்துக்கு வந்த அநுரகுமார திஸாநாயக்க, மன்னாரில் அந்தப் பிரதேச மக்களின் அனுமதியும் இணக்கமும் இல்லாமல் இத்தகைய திட்டங்கள் முன்னெடுக்கப்பட மாட்டா என்று வாக்குறுதியளித்து இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தொண்டைமானாறு கடல் நீரேரியில் இருந்து

# அடையாளம் தெரியாத பெண்ணின் சடலம் மீட்பு!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், தொண்டைமானாறு கடல் நீரேரியில் இருந்து இன்று மாலை பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட வந்த மீனவர்கள் கடலில் சடலம் ஒன்று மிதந்து இருப்பதைக் கண்டு அவசர தொலைபேசி இலக்கத்துக்குத் தகவல் வழங்கினர்.

உயிரிழந்தவர் பற்றிய விவரங்கள் அடையாளம் தெரியப்படாத நிலையில் சம்பவ இடத்துக்கு வந்த அச்சுவேலி பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார் ஆரம்பகட்ட விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மன்னாரில்...

உடனடியாக காற்றாலையாகக் கட்டமைக்கும் வேலையை முன்னெடுக்காமல் இடைநிறுத்தி வைக்கவும் இன்று நீதிமன்றத்தில் சம்பந்தப்பட்ட தரப்புகள் இணக்கம் கண்டன.

போராட்டம் நடத்தும் பொதுமக்கள் சார்பில் நீதிமன்றத்தில் இன்று காலை முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இந்த இணக்க ஏற்பாட்டை பொலிஸ் தரப்புடன் நீதிமன்றத்தில் வாதாடி செய்தார்.

இதன்படி காற்றாலை உதிரி பாகங்களுடன் வரவேண்டிய இன்னும் எழுபது வாகனங்களின் அணியில் இந்த ஐந்து வாகனங்களை மாத்திரம் தீவுக்குள் அனுமதிக்கவும், அதில் எடுத்துவரப்பட்ட பொருள்களை இறக்கி வைத்து விட்டு வாகனங்கள் திரும்பவும், எடுத்துவரப்பட்ட பொருள்களைக் கொண்டு காற்றாலைக் கட்டுமானப் பணி இப்போதைக்கு முன்னெடுக்கப்பட மாட்டாது என்பதும் நீதிமன்றத்தில் இணங்கப்பட்டன.

இந்த வாகன அணியை நேற்றிரவு பொதுமக்கள் மன்னார் தீவின் நுழைவாயிலில் வழி மறித்தமையை அடுத்து அங்கு தொடர்ந்து பதற்ற நிலை நிலவியமை தெரிந்ததே.

இந்த விடயத்தை இன்று பொலிஸார் மன்னார் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

'வாகனங்கள் வீதியை வழிமறித்து நிறுத்தப்பட்டுள்ளன. பொதுமக்களுக்குத் தொல்லை கொடுக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. ஏற்கனவே மக்களுக்குத் தொல்லை கொடுக்காமல் போராட்டம் நடத்துவோம் என்று போராட்டத் தரப்பால் அளிக்கப்பட்ட வாக்குறுதி மீறப்பட்டுள்ளது.' – எனத் தெரிவித்து இந்தப் போராட்டத்தை நடத்தும் இரு குருமார்கள் உட்பட அறுவருக்கு எதிராக பொலிஸார் நீதிமன்ற நடவடிக்கைக்கு விண்ணப்பம் செய்திருந்தனர்.

மன்னாரில் நேற்று நள்ளிரவு பதற்றம் ஏற்பட்டதை அடுத்துப் போராட்ட ஏற்பாட்டாளர்கள் அது குறித்து ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனுக்கு இன்று விடிகாலை அறிவித்தனர். தாம் உடனடியாகக் கொழும்பில் இருந்து வாகனத்தில் காலையில் நீதிமன்ற நேரத்துக்கு வந்து சேர்வார் என்று சுமந்திரன் அறிவித்தார். அதன்படி காலை ஒன்பதரை மணிக்கு அவர் நீதிமன்றத்தில் முன்னிலையானார்.

"பொது மக்களுக்கு தொல்லை கொடுப்பது தொடர்பான சட்ட ஏற்பாட்டை, பொதுமக்களுக்கு தொல்லை கொடுக்கும் தரப்புக்கு எதிராகத்தான் பிரயோகிக்க வேண்டும். காற்றாலை அமைப்பதும், அதனால் ஏற்படுகின்ற விடயங்களும் தான் பொதுமக்களுக்குத் தொல்லை கொடுக்கும் விவகாரங்கள். அது குறித்து பொதுமக்கள் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்கள். ஆக காற்றாலை அமைப்பதற்கு முயற்சிப்பவர்களுக்கு எதிராகப் பிரயோகிக்கப்பட வேண்டிய சட்டத்தைப் பாதிக்கப்படுகின்ற பொது மக்களுக்கு எதிராக பிரயோகிக்க முடியாது" – என்று சுமந்திரன் நீண்ட சட்ட வாதத்தை முன்வைத்தார்.

சுமார் இரண்டு, இரண்டரை மணி நேரம் சட்ட விவாதம் தொடர்ந்தது. காற்றாலை அமைப்புத் தொடர்பான தரப்புகளோடு இடையில் தொடர்பு கொண்டு ஆலோசனை பெறுவதற்காகப் பொலிஸாருக்குக் கால அவகாசம் வழங்கி இரண்டு தடவைகள் வழக்கு இடைநிறுத்தப்பட்டன. இதன் பின்னர் நீதிமன்றத்தல் நீதிவான் எம்.எம். சாஜித்தின் வழிகாட்டுதலில் தீர்வு ஒன்றுக்குச் சுமந்திரன் இணக்கம் தெரிவித்தார்.

அதன் அடிப்படையில், வழிமறிக்கப்பட்டிருக்கும் ஐந்து வாகனங்களையும் இப்போதைக்கு விடுவிக்கவும், அதன் மூலம் கொண்டுவரப்படும் உதிரி பாகங்கள் காற்றாலை அமைக்கும் பணிக்கு உடனடியாக பயன்படுத்தப்படாமல் இறக்கி வைக்கப்படும் என இணக்கம் காணப்பட்டது.

'பொதுமக்களுக்குத் தொல்லை கொடுக்காமல் போராட்டம் நடத்துவோம்' என்று போராட்டக்காரர்களால் முன்னர் நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்ட இணக்கம் மீறப்பட்டதாகப் பொலிஸாரால் இன்று காலை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் சுமந்திரனின் சட்டவாதத்தால் முறியடிக்கப்படாவிட்டால் மேற்படி ஆறு போராட்டக்காரப் பிரதிநிதிகளும் நீதிமன்ற உத்தரவில் கைது செய்யப்படக் கூடிய சூழல் இருந்ததாக பிற சட்டத்தரணிகள் 'முரசு'க்குத் தெரிவித்தனர்.

---

### ஜனாதிபதி...

அறியமுடிகின்றது.

தான் ஜனாதிபதியாகப் பதவியேற்று ஒரு வருடம் நெருங்கும் நிலையில், வடக்கில் முக்கிய பல அபிவிருத்தித் திட்டங்களையும், உட்கட்டமைப்பு மேம்பாடுகளையும் செய்வதற்கு ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார்.

இதன் ஆரம்பகட்டமாக யாழ். குறிகாட்டுவான் இறங்குதுறைமுகத்தை விஸ்தரிப்பதற்குரிய நடவடிக்கையை ஜனாதிபதி யாழ். விஜயத்தின்போது ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

அத்துடன், காரைநகர் உட்பட யாழில் கரையோரப் பகுதிகளில் கடற்றொழிலாளர்களின் நலன்கருதி பல திட்டங்களும் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன. மேலும் பல சந்திப்புகளையும் ஜனாதிபதி யாழ். விஜயத்தின்போது நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளார்.

---

### 18ஆம் திகதியே...

மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

மடு தேவாலய உற்சவத்தை ஒட்டி மன்னார் குரு முதல்வருடனும் ஏனைய குருமாருடனும் சுமந்திரன் இன்று பிற்பகல் மன்னாரில் கலந்துரையாடினார். அதையடுத்து தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே. சிவஞானத்துடனும் நல்லூர் உற்சவ தினங்கள் குறித்தும் கலந்துரையாடிய பின்னர் முன்னர் அறிவித்தபடி எதிர்வரும் வெள்ளிக்கிழமை 15ஆம் திகதி ஹர்த்தாலை வடக்கு, கிழக்கில் முன்னெடுப்பதில்லை என்றும், எதிர்வரும் 18ஆம் திகதி திங்கட்கிழமை அதை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் சுமந்திரன் மேலும் குறிப்பிட்டார்.

# புதிய பொலிஸ்மா அதிபராக பிரியந்த

## ஜனாதிபதி முன்வைத்த பரிந்துரைக்கு அரசமைப்பு பேரவை இன்று அங்கீகாரம்

இலங்கையின் 37 ஆவது பொலிஸ்மா அதிபராக, தற்போதைய பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவை நியமிக்க ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்வைத்த பரிந்துரைக்கு அரசமைப்பு பேரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரசமைப்பு பேரவை, சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் இன்று பிற்பகல் கூடியிருந்த நிலையில், இதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் பதவி நீக்கம் செய்யப்பட்டதையடுத்துப் பொலிஸ்மா அதிபருக்கான பதவியில் வெற்றிடம் ஏற்பட்டது.

இதனையடுத்துப் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவின் பெயரைப் புதிய பொலிஸ்மா அதிபர் பதவிக்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பரிந்துரைத்து அரசமைப்பு பேரவைக்கு அனுப்பியிருந்தார்.

இந்தநிலையிலேயே பொலிஸ்மா அதிபராக பிரியந்த வீரசூரியவை நியமிக்க அரசமைப்பு பேரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் சுட்டுக்கொலை!





மீகொடையில் இன்று செவ்வாய்க்கிழமை பகல் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்த ஹோமாகம பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் சாந்த முதுங்கொடுவ (வயது 46) வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் அட்டிகல்லே வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போதே, அவர் மீது காரில் பயணித்த அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகள் துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது, அவர் பல துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்குள்ளாகி ஹோமாகம வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

சந்தேகநபர்களை அடையாளம் கண்டு கைது செய்ய பொலிஸார் விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.

# இலங்கையில் இருந்து தனியொரு பெண் படகு மூலம் சென்று தமிழகத்தில் தஞ்சம்

(ந.லோகதயாளன்)

மன்னாரில் இருந்து தனியொரு பெண் இன்று அதிகாலை கடல் வழியாகப் படகு மூலம் சென்று தரையிறங்கி தமிழகத்தின் அரிச்சல்முனையில் தஞ்சம் அடைந்துள்ளார்.

மன்னார் மாவட்டம், தலைமன்னார் கிராமத்தில் இருந்து இன்று அதிகாலை ஒரு மணியளவில் 2 இலட்சம் ரூபா பணம் கொடுத்து அரிச்சல்முனையை மேற்படி பெண் சென்றடைந்துள்ளார்.

அவர் தற்போது மண்டபம் மெரைன் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

# அரச சேவைக்குப் புதிதாக ஆட்சேர்ப்பு

## 62 ஆயிரம் பேரை உள்ளீர்க்க அமைச்சரவை அனுமதி

இலங்கையின் அரச சேவைக்கு புதியவர்களை உள்ளீர்ப்பது குறித்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளார்.

அதன்படி, அரச சேவைக்கு 62 ஆயிரம் பேரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெறும் 2025 ஆம் ஆண்டுக்கான தேசிய இளைஞர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் எதிர்காலத்தைப் பொறுப்பேற்கும், பொறுப்புள்ள இளைஞர் தலைமைத்துவத்தை உருவாக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இளைஞர்களை அரசியல் கைப்பாவைகளாக மாற்றாமல், நாட்டின் எதிர்காலத்தை வழிநடத்தும் தலைவர்களாக உருவாக்குவதே இதுவரையிலான மாநாட்டின் இலக்காக இருப்பதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, பொதுச் சேவையில் உள்ள அத்தியாவசிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு 10 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி முன்னர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# காற்றாலை, கனிய மணல் அகழ்வுத் திட்டங்களுக்கு எதிராக மன்னாரில் 10ஆவது நாளாகப் போராட்டம்

(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் காற்றாலை மற்றும் கனிய மணல் அகழ்வு த் திட்டங்களை உடனடியாக நிறுத்தக் கோரி, மன்னார் மாவட்ட மக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் இணைந்து நடத்தி வரும் போராட்டம் இன்று செவ்வாய்க்கிழமை 10ஆவது நாளாகத் தொடர்கின்றது.

மன்னார் தாழ்வுபாடு கிராம மக்கள் இன்று சுழற்சி முறையில் கலந்துகொண்டு தங்கள் ஆதரவை வெளிப்படுத்தினர்.

நேற்று நள்ளிரவு காற்றாலை திட்டங்களுக்கான பாரிய உபகரணங்களைப் பொலிஸ் பாதுகாப்புடன் மன்னார் தீவுக்குள் கொண்டு செல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், போராட்டக்காரர்களின் கடும் எதிர்ப்பு காரணமாக உபகரணங்களை ஏற்றி வந்த பாரவூர்தி உள்ளே நுழைய முடியாமல் தடைபட்டது.

இதன்போது போராட்டக்காரர்களை அச்சுறுத்தி, புகைப்படம் எடுத்து அங்கிருந்து வெளியேற்ற பொலிஸார் முயற்சித்தபோதும், போராட்டக்காரர்களின் தொடர் எதிர்ப்பு காரணமாக, அந்த வாகனம் மன்னார் நீதிமன்ற வளாகம் முன்பாக நிறுத்தப்பட்டது.











நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


# எது சீர்திருத்தம்?

பாடசாலைக் கல்வி முறைமை தொடர்பில் புதிய சீர்திருத்தங்களைக் கொண்டு வருகின்றமை குறித்துக் கல்வி அமைச்சரும் பிரதமருமான ஹரிணி அமரசூரிய தொடர் நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். மாவட்டங்கள் தோறும் சென்று கல்விச் சீர்திருத்த நடவடிக்கைகள் தொடர்பான விழிப்புணர்வுக் கலந்துரையாடல்களை அவர் முன்னெடுக்கின்றார்.

திடுதிப்பென வெளியான கல்விச் சீர்திருத்தத் திட்டம் குறித்து பல்வேறு தரப்புகளில் இருந்தும் வாதப் பிரதிவாதங்கள் கிளம்பி இருக்கின்றன. இப்பத்தியில் நாம் அவை பற்றி பல தடவைகள் பிரஸ்தாபித்துள்ளோம்.

அண்மையில் வெளியான - 2024 ஆம் ஆண்டுக்கான - கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் கல்வித்துறை தொடர்பாக கூறப்பட்ட விடயங்களை ஒட்டி, சில விவகாரங்களை இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் முன் வைத்திருக்கின்றமையை இந்தப் பின்புலத்தில் நாம் நோக்க வேண்டி இருக்கின்றது.

13 வருடப் பாடசாலைக் கல்விக்காக முதலாம் தரத்தில் சேர்க்கப்படும் மாணவர்கள் இடை நடுவில் கல்வித் துறையை விட்டுக் காணாமல் போகும் 'இடை விலகல்' குறித்தும் இப்போது அதிகம் பேசப்படுகின்றது. ஆனால் இதைத் தாண்டி இன்னொரு விடயத்தை ஜோசப் ஸ்டாலின் சுட்டிக் காட்டி இருக்கிறார்.

இடை விலகலுக்கு அப்பால் பாடசாலைக் கல்வியைத் தொடரும் மாணவர்கள் பள்ளிக்கூட வகுப்புகளுக்கு வருகை தராமல் புறமொதுக்கும் நிலை குறித்து அவர் கவலை தெரிவித்திருக்கிறார்.

தேசிய மக்கள் சக்தி அரசு ஆட்சிக்கு வந்த பின்னரும் உயர்தர வகுப்பு மாணவர்கள் மட்டுமல்லர், சாதாரண தர வகுப்பு மாணவர்கள் மத்தியிலும் பள்ளிக்கு வருகை தருவது குறைவாக இருப்பதாக மேற்படி அறிக்கை சுட்டிக் காட்டுவதாக அவர் கூறுகின்றார்.

அது மாத்திரமல்ல, இப்படி பாடசாலைக்கு ஒழுங்காகப் பிள்ளைகள் வராமல் இருக்கும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நிலையான தீர்வுகளை உருவாக்க கல்வி அமைச்சை அந்த அறிக்கை வலியுறுத்துவதாகவும், பள்ளிக்கல்வியில் சாதாரண தரம் மற்றும் உயர்தர மாணவர்கள் மீது அதிக கவனம் செலுத்தப்படாமையை அறிக்கை விமர்சிக்கின்றது எனவும் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சுட்டுகின்றார்.

பாடசாலைக் கல்விக்கு நாடு பெருந்தொகைப் பணத்தை - நிதியை - வளத்தை - செலவிடும்போது, சாதாரண தர மற்றும் உயர்தர வகுப்பு மாணவர்கள் பாடசாலைக்கு சமுகம் தராமல் கல்வியை உதாசீனம் செய்வது என்பது மிக மோசமான நிலைமையாகும்.

இந்த வகுப்பு மாணவர்கள் வழக்கமான பாடசாலைகளுக்குச் செல்லாமல், பதிலாக தனியார் கல்வி வகுப்புகளுக்கு செல்வது மாணவர்கள் வருகையின் குறைவுக்கு முக்கிய காரணம் என்று ஸ்டாலின் சுட்டிக்காட்டுகின்ற விடயம் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

தனியார் கல்வி வகுப்புகளை கட்டுப்படுத்தவும், முறையான பாடசாலைக் கல்வியை வலுப்படுத்தவும் அரசாங்கம் தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தும் ஆசிரியர் சங்கத்தின் செயலாளர், இத்தகைய பிரச்சினைகளை எந்தக் கல்விச் சீர்திருத்தங்களும் இதுவரை தீர்க்கவில்லை என்றும் விசனிக்கின்றார்.

ஆக, கல்வித்துறை சார்ந்த பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில், அந்தச் சிக்கல்களை அவற்றின் பாதிப்பின் அடிப்படையில் - முன்னிலைத் தேவையின் நிமித்தம் - முதலில் வரிசைப்படுத்த வேண்டும். அதன் பின்னரே அந்த ஒழுங்கின் அடிப்படையில் சீர்திருத்த நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய பிரச்சனைகளுக்குத் தீர்வு காணாமல் தள்ளிப் போட்டுவிட்டு, அற்ப பிரச்சனைகளைத் தீர்க்கும் விடயங்களை கல்விச் சீர்திருத்தமாக முன்னெடுப்பதில் அர்த்தமில்லை.




# உலக இளைஞர் தினம் இன்று!

ஒவ்வொரு மனித சமுதாயத்தின் வளர்ச்சிக்கான சக்தி, கனவுகளால் மட்டுமல்ல அந்தக் கனவுகளை செயலாக்கும் இளைஞர்களால்தான் அமைகிறது. உலக அளவில் இளைஞர்களின் சமூக, பொருளாதார, அரசியல் பங்களிப்பை முன்னிறுத்தும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் ஆவணி-12 அன்று உலக இ ளைஞர் தினம் (International Youth Day) கொண்டாடப்படுகிறது. இது ஐக்கிய நாடுகள் சபையால் 1999 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது.

உலக இளைஞர்களின் எதிர்பார்ப்பு, சவால்கள், சமூகப் பங்களிப்பு போன்றவற்றைப் பொதுவாக உலகம் அறியச் செய்தல்தான் இதன் முக்கிய நோக்கம். மேலும், இளைஞர்கள் எதிர்நோக்கும் வேலைவாய்ப்பு குறை பாடு, கல்வி வாய்ப்புகள், பாலின சமத்துவம், மன அழுத்தம், அரசியல் புறக்கணிப்பு போன்றவற்றில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் தினம் நோக்கப்படுகிறது.

உலகளவில் சுமார் 1.8 பில்லியன் இளைஞர்கள் உள்ளனர் (வயது 10-24). அவர்களில் பெரும்பாலா னோர் வளர்ந்துவரும் நாடுகளில் வாழ்கிறார்கள். ருநேுளுஊழுஇ ஐடுழு அறிக்கைகள் இளைஞர்கள் அதிகரித்த வேலைவாய்ப்பு துறைகளில் திறன் மற்றும் பயிற்சி தேவை என வலியுறுத்துகிறது.

### இளைஞர்கள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள்

### வேலைவாய்ப்பு பற்றாக்குறை

ILO (International Labour Organization) 2024 அறிக்கை படி, உலகளவில் இளைஞர் வேலை வாய்ப்பு இல்லாதவர்களின் வீதம் 13 வீதம் ஆகும். அதே சமயம், வேலைக்காகத் தற்காலிக வேலைகள் (Gig Economy) மற்றும் தற்செயல் வேலைகள் (Informal jobs) அதிகரித்து வருவதால், இளை ஞர்களுக்கு பங்கு பெறும் தொழில்துறை நிலை தடுமாறுகிறது.

## இளைஞர் மனங்களில் புரட்சியும் சமுதாயத்தின் வளர்ச்சியும்...!

உறங்கும் உலகில் விழிக்கும் கண்கள்,
உறுதி கொண்ட உற்சாகம் நிரம்பிய மனங்கள்,
அழிக்காத கனவுகளைச் சுமந்தவர்கள்
அவர்கள்தான் இளைஞர்கள்!

அடர்ந்த இருளில் ஒளியாக பறக்கும்,
அமைதிக்கு வில்லாக அமைந்து நிற்கும்,
அழகிய நாளை சிந்திக்க வைக்கும்
அழிவில்லா உயிரின் கனிமம் இளைஞர்கள்!

தொழில் தொடங்கும் துணிவும்,
தூண்டிவிடும் தீர்வும்,
நாடு கேட்கும் தேவைக்கும்
நம்பிக்கையான பதில்கள் இவர்கள்!

சட்டம் மீறிய சத்தங்கள் அல்ல,
சரியான பாதை தேடும் சிந்தனைகள்!
சமத்துவம் கேட்கும் குரல்களாய்
சமூகத்தை மாற்றும் செயல்கள்!

திறமையைச் சிதறாமல் தெய்வமாக்குவோம்,
தனிப்பட்ட கனவுகளை சமூகக் கனவுகளாக்குவோம்,
இன்றைய இளைஞர் நாளில் உறுதியெடுக்கின்றோம்
“நாளைய உலகம் நம்மால் நல்லதாய் மாறும்!

உதாரணமாக, COVID-19 பின்விளைவாக பல இடங்களில் இளைஞர் வேலை வாய்ப்பு பாதிக் கப்பட்டது. இந்தியாவில் மட்டும் 2022 ஆம் ஆண் டில் இளைஞர் வேலைவாய்ப்பு 5 வீதம் குறைந்தது.

### டிஜிட்டல் வேறுபாடு (Digital Divide)

2023 ஆம் ஆண்டில் World Economic Forum

தொடர்ச்சி ▼



# உலக இளைஞர் தினம் இன்று!

தொடர்ச்சி▲

வழங்கிய தகவல், கிராமப்புற 40 வீத இளைஞர்கள் ஒன்லைன் கல்வி மற்றும் தொழில்நுட்ப வசதிகளுக்கு அணுகல் இல்லாத நிலைமை உள்ளது என்று காட்டுகிறது.

இலங்கையில் 'Digital Divide' க்கான அரசு திட்டம் 2023 இல் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இன்னும் பெரும்பான்மையினர் சமூக வலயங்களில் உட்பட வாய்ப்பு குறைவு காட்டுகின்றனர்.

### மனநலப் பிரச்சினைகள்

உலகளாவிய மனநலம் ஆய்வுகளின்படி, இளம் வயதுக்கு உட்பட்டவர்களில் (15-24 வயது) இளைஞர்களுக்கு 25 வீதம் மன அழுத்தம் மற்றும் மன ஆரோக்கிய குறைபாடுகள் அடிக்கடி ஏற்படுகின்றன. தற்கொலையில் இளைஞர்களே அதிகம் ஈடுபடுகின்றனர்.

### அரசியல் புறக்கணிப்பு

2024 ஆம் ஆண்டில் நடைபெற்ற பல உலகப் பொருளாதார மாநாடுகளில் இளைஞர்களின் அரசியல் பங்கு குறைவு மற்றும் அவர்களின் கருத்துக்கள் புறக்கணிப்பு எனும் சவால்களை விவாதித்துள்ளனர்.

இலங்கையில் இளைஞர்கள் அரசியல் முடிவுகளுக்கு அதிக பங்களிப்பு கொடுக்க விரும்புகின்றனர். ஆனால் இடைநிலை வழிகாட்டல்கள் குறைவு மற்றும் அரசியல் சூழல் காரணமாக சவால்களை சந்திக்கின்றனர்.

### இளைஞர்கள் மாற்றத்தை ஏற்படுத்தும் சக்தியாக சுற்றுச்சூழல் பாதுகாப்பு

Greta Thunberg போன்ற இளைஞர் சூழலியல் செயற்பாட்டாளர்கள் உலகளாவிய பருவநிலை மாற்றத்தை தடுக்க போராடி வருகிறார்கள்.

2023 இல் ளுசை டுயமெய லுழரவா ஊடைஅயவந யுஉவழைெ நேவறழசம என்பவர் ஒருங்கிணைத்து கொண்டிருக்கும் பிளாஸ்டிக் தடுப்பு இயக்கம் நாட்டில் பல இடங்களில் வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது.

### மனநலம் மற்றும் விழிப்புணர்வு

2023 இல் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட 'Youth Mental u;ealth Initiative' மூலம் இளைஞர்களுக்கு ஆன்லைன் ஆலோசனை மற்றும் குழு சிகிச்சை வழங்கப்படுகிறது.

உலகளவில், 'Mentalu;ealthAwareness' என்ற சமூக ஊடக இயக்கம் 2024 ஆம் ஆண்டிலும் அதிகம் வளர்ந்து, இளைஞர்களின் மனநலத்தை மேம்படுத்த உதவுகிறது.

### சமூக ஊடகங்கள் வழியாக மாற்றம்

2024 இல் FaceBook, YouTube ஆகியவற்றில் சமூக நீதி, கல்வி, அரசியல் விழிப்புணர்வு போன்ற விடயங்களைப் பற்றி இளைஞர்கள் ஓடியோ வீடியோ வடிவில் செய்தி பரப்பி வருகிறார்கள்.

இலங்கையில் சமூக ஊடகங்களை பயன்படுத்தி கல்வி ஆதரவு இயக்கங்கள் 2023 இல் அதிகரித்துள்ளன.

### தன்னார்வ ,யக்கங்கள்

Red Cross Youth Sri Lanka கடந்த வருடம் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் முக்கிய பங்கு வகித்தது.

2024 இல் NSS (National Service Scheme) இளைஞர்கள் நாட்டில் பல சமூக சேவை திட்டங்களை நடத்தி வருகின்றனர்.

### இலங்கை இளைஞர்கள் சமகால முன்னேற்றங்கள்

இலங்கை இளைஞர்களின் தொழில்நுட்பத் திறன்களை மேம்படுத்த 'Skills for Future' என்ற திட்டம் 2023 இல் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலம் பல இளைஞர்கள் தொழில்நுட்ப, தொழில் முனைவோர் திறன்களை கற்றுக் கொண்டுள்ளனர். Startups துறையில் இலங்கை இளைஞர்கள் 2024 இல் மிக சிறந்த முன்னேற்றங்களைச் செய்துள்ளனர். புது தொழில்நுட்பம் கொண்டு வரும் நிறுவனங்கள் அதிகரித்துள்ளன. இலங்கை இளைஞர்களால் முன்னெடுக்கப்படும் விவசாயத் தொழில்கள் சுற்றுச்சூழல் சிந்தனையுடன் இணைந்து வளர்கின்றன.

சமூக மற்றும் கலாச்சார விழாக்களில் இளைஞர்கள் முக்கிய பங்காற்றி, நாட்டின் ஒற்றுமையை ஊக்குவிக்கின்றனர்.

### இளைஞர்களே எதிர்காலத்தின் தூண்கள்

உலகம் இன்று எதிர்கொள்ளும் பருவநிலை மாற்றம், அமைதியின் இழப்பு, வேளாண்மை நெருக்கடி, வேலைவாய்ப்பு பற்றாக்குறை போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை உருவாக்குபவர்கள் இளைஞர்களே. அவர்களுக்கான உற்சாகம், வழிகாட்டுதல் மற்றும் தகுந்த இடம் வழங்கப்பட்டால், உலகம் ஒரு புதிய சகாப்தத்தை நோக்கி பயணிக்கும்.

அதனால் தான், உலக இளைஞர் தினம் என்பது ஒரு விழிப்புணர்வு நாள் மட்டுமல்ல அது ஒரு இயக்கம். நம் எதிர்காலத்தை வடிவமைக்கும் இயக்கம்.

**நடராசா கோபிராம்**
(உளவியல் சிறப்புக்கலை மாணவன்,
யாழ்.பல்கலைக்கழகம்)

# எழுதுமட்டுவாழ் ஏ-9 வீதியில் பஸ் மோதி பெண் உயிரிழப்பு!

மோட்டார் சைக்கிளில் பயணித்த போது தனியார் பஸ் மோதியதில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த குடும்பப் பெண், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

பிள்ளையை பாடசாலையில் மேலதிக வகுப்புக்காக விட்டுவிட்டு வீடு திரும்பிய வேளையில் இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் இன்று (12) காலை எழுதுமட்டுவாழ் ஏ - 9 வீதியில் இடம் பெற்றுள்ளது.

எழுதுமட்டுவாழ் விளுபளையைச் சேர்ந்த செல்வகுலசிங்கம் பேரின்பநாயகி என்பவர் தனது பிள்ளையை முன்பள்ளியில் விட்டு விட்டு வீடு திரும்பும் வழியில் யாழ்ப்பாணத்தில் இருந்து தியத்தலாவவுக்குச் சென்ற தனியார் பஸ் மோதி படு காயமடைந்தார்.

இந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# ‘நிலத்தடி நீர் எங்கள் உயிர்நாடி’ மாணவர்களுக்கு ஓவியப் போட்டி

நல்லூர் உற்சவ காலத்தின்போது யாழ்ப்பாண பல்கலைக்கழக வஸ்பர் செயற்றிட்டம் நிகழ்த்தும் நீர்வளம் பேணல் பற்றிய பத்து நாள் சிறப்புக் கண்காட்சியுடன் சார்ந்தவகையில் சிறகுகள் அமையம் முன்னின்று நடத்தும் ஓவியப்போட்டிக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

போட்டி தலைப்புக்களாக பிரிவு 1: தரம் 1 – தரம் 5 மாணவர்களுக்கு “என் கிராம தண்ணீரின் கதை ”, “நீர் இல்லாது வாழ்க்கை இல்லை” போன்ற தலைப்பு களிலும்–

பிரிவு 2: தரம் 6 – தரம் 8 மாணவர் களுக்கு “நிலத்தடி நீர் – கண்ணுக்குத் தெரியாத செல்வம் ”, “நீர் பாதுகாப்பு – நம் பொறுப்பு”, “நிலத்தடி நீர் – நம் எதிர்காலம்” போன்ற தலைப்புகளிலும்

பிரிவு 3: தரம் 9 – தரம் 13 மாண வர்களுக்கு “நிலத்தடி நீர் – உயிரின் அடிக் கல்”, நீர் தட்டுப்பாட்டை தடுக்க – இன்று செயற்படு”, “நிலத்தடி நீர் – சூழலின் அடிநாதம்” ஆகிய தலைப்புக்களும் வழங்கப்பட்டுள்ளன.

மாணவர்களின் பெயர், தரம், பாட சாலையின் பெயர், முகவரி, தொலை பேசி இலக்கம் தெளிவாக குறிப்பிடப்பட்டு சித்திரங்கள் சிறகுகள் அமையம், இல 21 – 2 குமாரசுவாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 20.08.2025 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பங்கு பெற்றும் அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.

தெரிவு செய்யப்படும் ஓவியங்கள் நல்லூரில் இடம்பெறும் நீர்வளக் கண் காட்சியில் காட்சிப்படுத்தப்படும்.

மேலதிக விபரங்களைப் பெற 077 218 1459, 076 244 4504 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் ஊடாகத் தொடர்பு கொள்ளமுடியும்.

போட்டிகளில் மாணவர்கள் பங்கு கொள்ள ஊக்கப்படுத்துமாறு ஏற்பாட் டாளர்கள் கோரிக்கை முன் வைத்துள்ள னர்.







# கிளிநொச்சி மாவட்டத்துக்கு அரச அதிபர்!



கிளிநொச்சி மாவட்ட பதில் அரச அதிபராக கடமையாற்றிய சு.முரளிதரன், நிரந்தர அரச அதிபராக பதவி உயர்வு பெற்று நேற்றுக் (11) கடமையை பொறுப்பேற்றார்.

இந்த நிகழ்வில் பிரதேச செயலர்கள், உதவிப் பிரதேச செயலர்கள், மற்றும் கணக்காளர்கள், பிரதிநிதிகள் திட்டமிடல் பணிப்பாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# மீனவர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்தார் ஹிஸ்புல்லாஹ் எம்.பி.





காத்தான்குடி நகர சபை உறுப்பினர் இ.எம்.றுஸ்வினின் கோரிக்கைக்கு அமைய பூநெச்சிமுனை மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராய்வதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் நேற்று (11) கள விஜயம் மேற்கொண்டார்.

இதன் போது, பூநொச்சிமுனை மீனவர்கள் எதிர்கொள்ளும் ஆழ்கடல் மீனவப் படகுகளை பழுது பார்த்தல், மீன்களை ஏற்றி இறக்கல் மற்றும் எரிபொருள் நிரப்புதல் உள்ளிட்ட முக்கிய பிரச்சினைகளை நேரடியாக கண்காணித்தார். அவர்களுடன் கலந்துரையாடி அவர்களது கோரிக்கைகளையும் உள்வாங்கிக்கொண்டார்.

மேலும், மீனவர்களின் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தான் தயாராக இருக்கிறார் என்றும் தெரிவித்தார்.

# செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் திருவிழா எதிர்வரும் 23இல் ஆரம்பம்!



சரித்திரப் பிரசித்தி பெற்ற வடமராட்சி, தொண்டைமானாறு, செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 16 தினங்கள் திருவிழா நடைபெறும்.

ஐந்தாம் திருவிழாவான எதிர்வரும் 27ஆம் திகதி புதன்கிழமை முதல் காலைத் திருவிழா ஆரம்பமாகும். அன்றையதினம் விநாயகப்பெருமானும் வேலவரும் ஒன்றிணைந்து வீதி உலா வருவார்கள்.

சிறப்புத் திருவிழாக்களான பத்தாம் திருவிழாவான பூங்காவனத்திருவிழா எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமையும், 11 ஆம் திருவிழாவான கைலாச வாகனத் திருவிழா 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் சப்பறத்திருவிழா 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கும் தேர்த் திருவிழா மறுநாள் சனிக்கிழமை காலை 7 மணிக்கும், தீர்த்தத்திருவிழா மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கும் நடைபெறும். மௌனத் திருவிழாவுடன் வருடாந்த மகோற்சவம் நிறைவுபெறும். இம்முறை மகோற்சவ கால பிரதம குருவாக சிவஸ்ரீ சிவானந்தஜயர் செல்லமணி ஜயர் இருப்பார்.





# மட்டுவில் வளர்மதி சன சமூக நிலைய 60ஆவது ஆண்டு நிறைவு விழா!



சாவகச்சேரி மட்டுவில் தெற்கு வளர்மதி சன சமூக நிலையம் தனது 60 ஆவது ஆண்டு நிறைவு விழாவை நேற்று முன்தினம் (10.08) கொண்டாடியது.

நிலையத் தலைவர் தலைமையில் நடைபெற்றவிழாவுக்குமுதன்மைவிருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் சி. ஸ்ரீசற்குணராஜாவும் சிறப்பு விருந்தினராகக் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் ச.லலீசனும் கலந்து கொண்டனர்.

அமரர் பொன் நாகமணியால் உருவாக்கப்பட்ட சன சமூக நிலையம் இன்று வளர்மதி கல்விக் கழகம், வளர்மதி விளையாட்டு கழகம் , வளர்மதி மாதர் சங்கம், வளர்மதி அறங்காவல் புரியும் ஆலயம் என்று பெரு வளர்ச்சி கண்டுள்ளது.

நிலையத்தின் ஆரம்பகால உறுப்பினர்கள் உட்பட நிலைய வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்கிய பலர் மற்றும் மாணவர்கள் இந்த நிகழ்வில் மதிப்பளிக்கப்பட்டனர்.



# புத்தூர், மணற்பகுதி புவனேஸ்வரி அறநெறி நிலையத்தில் நூலகம்!

புத்தூர், மணற்பகுதி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் கோவில் அறநெறி நிலையத்தின் ஆன்மீக நூலகம், கோவில் பெருந் திருவிழாவின் பூங்காவனம் திருவிழாவான நேற்று முன்தினம் (10) இரவு திறந்து வைக்கப்பட்டது.

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் வழங்கிய புத்தகங்களுடன் ஊரவர்களும் சில புத்தகங்களை வழங்கி இந்த ஆன்மீக நூலகம் திறக்கப்பட்டுள்ளது.

கோவில் பரிபாலன சபைத் தலைவர் அ. பரம்சோதி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை அதிபர் ச. லலீசன் கலந்து கொண்டு நூலகத்தை திறந்து வைத்தார்.

நிகழ்வில் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.








# திருகோணமலை றோட்டரிக் கழகத்தின் 47ஆவது தலைவராகப் பிரபாகரன்!

திருகோணமலை றோட்டரி கழகத்தின் 47ஆவது தலைவராக றோட்டேரியன் க. பிரபாகரன் பதவியேற்றுள்ளார்.

திருகோணமலை டைக் வீதியிலுள்ள றோட்டரி அலுவலகத்தில் நேற்று முன்தினம் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த விழாவில் மாவட்ட றோட்டரி முன்னாள் ஆளுநர் கௌரி ராஜன் பிரதம விருந்தினராகவும், லங்கா ஐ.ஓ.சி. மூத்த துணைத் தலைவர் நவீன் குமார் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

திருகோணமலை மற்றும் கிளிநொச்சி றோட்டேரியர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், றோட்டரக்டர்கள், இன்டரக்டர்கள், றோட்டேரியர்களின் துணைவியர் மற்றும் நண்பர்கள் கலந்து கொண்டனர்.

உடனடி முன்னாள் தலைவர் றொட்டேரியன். சி. ஜெகதீஸ்வரன் வரவேற்புரை நிகழ்த்தி, 2024 - 2025 ஆண்டின் வெற்றிகரமான பணிக்காலத்தை நினைவு கூர்ந்து, தன்னுடன் பணியாற்றிய குழு உறுப்பினர்களுக்கு தனது நன்றியை தெரிவித்தார். உடனடி முன்னாள் செயலாளர் றொட்டேரியன் பி. ரவிச்சந்திரன், கடந்த ஆண்டின் முக்கிய திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்து சுருக்கமான அறிக்கையை வழங்கினார்.

நிகழ்வின் ஒரு பகுதியாக, திருகோணமலை சென். ஜோசப் கல்லூரிக்கு மேசைப்பந்தாட்ட உபகரணங்கள் வழங்கப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட 15 மாணவர்களுக்குச் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

ஜீ. எஸ். ஜெகதீஸ்வரன், புதியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் றொட்டேரியன் க. பிரபாகரனை வாழ்த்தி, கழகத்தை வழிநடத்த அவருக்கு வாழ்த்துக்களை வழங்கினார்.












# தென்மராட்சி பிரதேச, நகரப் பகுதிகளில் வீதிகளில் விடும் வாகனங்களால் நெருக்கடி

தென்மராட்சி பிரதேச, நகரப் பகுதிகளில் பிரதான வீதியின் இருபக்கமும் காலை வேளைகளில் வாகனங்களை நிறுத்துவதால் பெருமக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

கொடிகாமம் , சாவகச்சேரி மற்றும் கைதடி நகரப் பகுதிகளில் தினமும் பெருமளவு வாகனங்கள் வீதிகளின் இருபக்கமும் நிறுத்தப்படுகின்றன.

ஏ – 9 வீதியில் அடிக்கடி வாகனங்கள் பயணிக்கும் நிலையில் வீதியோரங்களில் நிறுத்தப்படும் வாகனங்களால் சிரமத்துக்கு ஆளாகின்றனர் என்று தெரிவித்தனர்.

முன்னைய காலங்களில் ஒன்றுவிட்டு ஒருநாள் ஒருபக்கம் வாகனம் நிறுத்த உள்ளூராட்சி சபைகள் அறிவித்தல் பலகைகளை நாட்டியிருந்தனர். தற்போது அந்த அறிவிப்புப் பலகைகள் அப்புறப்படுத்தப்பட்ட நிலையில் வீதியின் இருபக்கமும் சந்தைக்கு மற்றும் வர்த்தக நிலையங்களுக்கு வரும் பொதுமக்கள் தமது வாகனங்களையும் வர்த்தகப் பொருள்களை ஏற்றி வரும் வாகனங்களையும் வீதியோரங்களில் தொடர்ச்சியாக நிறுத்தி வைக்கின்றனர்.

இதனால் பொதுமக்கள் வீதியைக் கடக்க முடியாத நிலை காணப்படுகிறது எனவும் தெரிவித்தனர்.





# கிழக்குக்கு 1713 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியது முதலமைச்சு!





**(எஸ்.கீதபொன்கலன்)**

கிழக்கு மாகாண முதலமைச்சால் கிழக்கு மாகாணத்துக்கு 1713 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண முதலமைச்சின் மாதாந்திர முன்னேற்ற மதிப்பாய்வுக் கூட்டம் கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர தலைமையில் கடந்த 7 ஆம் திகதி கிழக்கு மாகாண முதலமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், முதலமைச்சுக்குச் சொந்தமான நிறுவனங்களால் மட்டும் கிழக்கு மாகாணத்தின் வளர்ச்சிக்காக 1713 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த நிதியைக் கொண்டு செயல்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து விவாதிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில், முதலமைச்சால் நிர்வகிக்கப்படும் 45 உள்ளூராட்சி நிறுவனங்களின் (நகராட்சிகள், நகர சபைகள், பிரதேச சபைகள்) மற்றும் உள்ளூராட்சித் துறை, கிராமப்புற தொழில்துறைத் துறை, சமூக சேவைகள் துறை மற்றும் சுற்றுலா பணியகம் ஆகியவற்றின் திட்ட முன்னேற்றம் மதிப்பாய்வு செய்யப்பட்டது.

இந்த ஆண்டு இறுதிக்குள் அனைத்துத் திட்டங்களையும் முடிக்குமாறு ஆளுநர் நிறுவனத் தலைவர்களுக்கு அறிவுறுத்தினார்.

'உங்கள் சாலை அடையாளத்தை அறிந்து கொள்ளுங்கள்' என்ற தலைப்பில் முதலமைச்சால் தொகுக்கப்பட்ட சாலை அடையாளங்கள் குறித்த புத்தகமும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் பிரதம செயலாளர் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

# புலோலி குரும்பைகட்டி சாமுண்டாம்பிகா நூதன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம்!

புலோலி குரும்பைகட்டி சாமுண்டாம்பிகா சமேத ஞானவைரவர் ஆலய நவக்கிரக தேவர்கள் நூதன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் 9.15 மணி வரையிலான சுபவேளையில் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்துக்கான கர்மா கிரியைகள் 18 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 5.50 மணிமுதல் ஆரம்பமாகவுள்ளன.

20 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 3.30 மணி வரை பக்தர்கள் எண்ணெய்காப்புச் சாத்தும் நிகழ்வு நடைபெறும். மறுநாள் வியாழக்கிழமை மகாகும்பாபிஷேகம் நடைபெறும்.

ஆலய பிரதமகுரு சிவஸ்ரீவை. இராமேஸ்வரக்குருக்களின் உதவியுடன் கட்டுவன் முத்துமாரி அம்மன் கோவில் பிரதமகுரு கிரியா துரந்தரர் சிவஸ்ரீ சிவபாத ஆறுமுகக் குருக்கள் பிரதமகுருவாக இருந்து கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார்.

கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 15 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும் என்று ஆலயய தர்மகர்த்தா குணரத்தினம் தெரிவித்துள்ளார்.




# இளைஞரை போதைப்பொருள் பாவனையிலிருந்து மீட்டெடுக்கும் பொறுப்பு ஊடகங்களுக்கும் உள்ளது!

## அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினர் ஏ.எஸ்.பாஸித் தெரிவிப்பு

(றிஸ்வான் சாலிஹூ)

இளைஞர்கள் மத்தியில் போதைப் பொருள் பாவனை அதிகமாக உள்ளது. அதனை கட்டுப்படுத்த பல சமூக நிறுவனங்கள் முன்வருகின்றது. அந்த வகையில் அக்கரைப்பற்று பிரதேசத்தில் அக்கரைப்பற்று மாநகர சபையும் ஏனைய பொது அமைப்புக்களும் பல வழிகளிலும் இதனை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றன.

இந்தச் சந்தர்ப்பத்தில், எதிர்கால எமது இளைஞர்களின் வாழ்வையும் அவர்களின் குடும்பவியலையும் கருத்தில் கொண்டு துறைசார்ந்த நிபுணர்கள் மற்றும் உலமாக்கள் மூலம் வழங்குகின்ற ஆலோசனை வழிகாட்டல்களை இந்தச் சமூகத்துக்குச் சகல வழிகளிலும் கொண்டு போய்



சேர்க்க வேண்டிய பாரிய பொறுப்பும் தார்மீக கடமையும் ஊடகவியலாளர்களுக்கு இருக்கின்றது என்று அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினர் ஏ.எஸ்.பாஸித் தெரிவித்தார்.

சிலோன் ஜேர்னலிஸ்ட் போரத்தின் விசேட ஒன்றுகூடல் போரத்தின் தலைவரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான எம்.எஸ்.எம்.ஜஃபர் தலைமையில் அக்கரைப்பற்று எவ்.என். பீச் றிசேட் வளாகத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட மாநகர சபை உறுப்பினர் ஏ. எஸ். பாஸித் ஊடகவியலாளர்களுக்கு மத்தியில் இவ்வாறு உரையாற்றினார்.

இக்கூட்டத்தில் போரத்தின் பொதுச் செயலாளர் எஸ்.அஸ்ரப்கான், சிரேஷ்ட பிரதித் தலைவர் பீ.எம்.றஹ்மதுல்லா, பிரதித் தலைவர்களான கே.எல்.அமீர், றபீக் பிர்தௌஸ், உப தலைவர் ஏ.எல். எம்.சினாஸ் உள்ளிட்ட உயர்பீட உறுப்பினர்கள், பொதுச்சபை உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



### ரஷ்யா - உக்ரைன் போர் விவகாரம்:

# பிரதமர் மோடி, ஜெலன்ஸ்கி தொலைபேசியில் உரையாடல்

ரஷ்யா, உக்ரைன் இடையே கடந்த 3 ஆண்டுகளுக்கும் மேலாக போர் நடைபெற்று வருகிறது. பல்வேறு முயற்சிகள் மேற்கொண்ட போதிலும், ரஷ்யா போர் நிறுத்தத்துக்கு சம்மதிக்கவில்லை.

இந்நிலையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட், ட்ரம்பை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் நேரடியாக சந்தித்துப் பேசவுள்ளார். அப்போது போர் நிறுத்தம் குறித்து முடிவு எடுக்கப்படலாம் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் பிரதமர் மோடியை, உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸகியை நேற்று தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு பேசியுள்ளார்.

இதுதொடர்பாக உக்ரைன் ஜனாதிபதி கூறும்போது,

"உக்ரைன் நகரங்கள் மற்றும் கிராமங்கள் மீதான ரஷ்ய படையெடுப்பு குறித்து பிரதமர் மோடியிடம் தெரிவித்தேன். போரை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தாலும் ரஷ்யா அதற்கு சம்மதிக்கவில்லை." என்று குறிப்பிட்டுள்ளார்.



மோடியுடன், ஜெலன்ஸ்கி நீண்ட நேரம் பேசியதாக மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. மேலும், பிரதமர் மோடியை நேரில் சந்தித்துப் பேச விரும்புவதாகவும் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்தார்.

இது தொடர்பாக பிரதமர் மோடி தனது எக்ஸ் தளப் பக்கத்தில் கூறும்போது,

"உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியுடன் பேசியதிலும், சமீபத்திய முன்னேற்றங்கள் குறித்த அவரது பார்வைகளைக் கேட்டதிலும் மகிழ்ச்சி." எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ரஷ்யா, உக்ரைன் இடையேயான போருக்கு அமைதியான தீர்வு காண வேண்டியதன் அவசியம் குறித்த இந்தியாவின் நிலைப்பாட்டை அவரிடம் தெரிவித்ததாகவும் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த விடயத்தில் சாத்தியமான பங்களிப்பை வழங்க இந்தியா உறுதியாக இருப்பதாகவும், உக்ரைனுடனான இருநாட்டு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதிலும் உறுதி பூண்டுள்ளதாக பிரதமர் மோடி தனது பதிவில் தெரிவித்துள்ளார்.

# முதலீடுகளை ஈர்க்க ஸ்டாலின் லண்டன், ஜேர்மனி செல்கிறார்

தமிழகத்துக்கு வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் விதமாக, செப்ரெம்பர் முதல் வாரத்தில் லண்டன், ஜேர்மனிக்கு முதல்வர் ஸ்டாலின் பயணம் மேற்கொள்கிறார்.

தமிழக பொருளாதாரத்தை ஒரு ட்ரில்லியன் டொலராக உயர்த்த தமிழக அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இதற்காக, உலக முதலீட்டாளர்கள் மாநாடு, முதலீட்டாளர் சந்திப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அவ்வப்போது வெளிநாடுகளிலும் முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி, அதில் பங்கேற்கும் முதல்வர் ஸ்டாலின், தொழிலதிபர்களை சந்தித்து அழைப்பு விடுத்து வருகிறார்.

அந்த வகையில், இதுவரை 4 வெளிநாட்டு பயணங்களை முதல்வர் மேற்கொண்டுள்ளார். கடந்த 2022 மார்ச்சில் டுபாய், ஐக்கிய அரபு நாடுகளில் 6,100 கோடி இந்திய ரூபா ஒப்பந்தங்கள், அதே ஆண்டில் சிங்கப்பூர், ஜப்பானில் 1,342 கோடி இந்திய ரூபா ஒப்பந்தங்கள், 2024 தொடக்கத்தில் ஸ்பெயினில் 3,440 கோடி இந்திய ரூபா ஒப்பந்தங்கள், அதே ஆண்டு ஓகஸ்ட், செப்ரெம்பரில் அமெரிக்காவில் 7,616 கோடி இந்திய ரூபா முதலீட்டு ஒப்பந்தங்கள் முதல்வர் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டன.



இதன் தொடர்ச்சியாக, அடுத்து இங்கிலாந்து, ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு சென்று தொழில் முதலீட்டு ஒப்பந்தங்கள் மேற்கொள்ள முதல்வர் ஸ்டாலின் முடிவு செய்துள்ளார். இம்மாத இறுதி அல்லது செப்ரெம்பர் தொடக்கத்தில் இப்பயணம் இருக்கும் என்று கூறப்படுகிறது.

குறிப்பாக, இங்கிலாந்தின் லண்டன் நகரில் நடைபெறும் முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்கும் முதல்வர், பல்வேறு நிறுவனங்களின் அதிபர்களை சந்தித்து தமிழகத்தில் முதலீடு செய்ய அழைப்பு விடுக்கிறார்.

லண்டன் கிங்ஸ் கல்லூரி மாணவர்கள் கூட்டத்தில் முதல்வர் உரையாற்ற உள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது. இங்கிலாந்து, ஜேர்மனியில் அவர் 10 நாள்கள் தங்கியிருப்பார் என்று கூறப்படுகிறது.

முதல்வரின் முழுமையான பயணத் திட்டம் ஒருசில நாள்களில் வெளியாகும் என்று தெரிகிறது.

# 100 கோடி இந்திய ரூபா ஊழல்: ரோஜா மீது பெண் எம்.எல்.ஏ புகார்

நடிகை ரோஜா 100 கோடி இந்திய ரூபா வரை ஊழல் செய்துள்ளார் என பெண் எம்.எல்.ஏ ஒருவர் புகார் தெரிவித்துள்ளார்.

ஆந்திர மாநிலம் கர்னூல் மாவட்டம், ஆள்ளகட்டா சட்டமன்ற தொகுதியின் தெலுங்கு தேசம் கட்சி உறுப்பினர் அகிலபிரியா. இவர் இளம் வயதிலேயே ஆந்திர மாநிலத்தின் அமைச்சராக கடந்த சந்திரபாபு ஆட்சியின் போது பதவி வகித்தார்.



நடிகை ரோஜா, பதவி வகித்த சுற்றுலா மற்றும் இளைஞர் மேம்பாடு துறையின் அமைச்சராகவே அகில பிரியாவும் பதவி வகித்தார்.

இந்நிலையில், நேற்று அவர் கர்னூலில் செய்தியாளர்களிடம் கூறுகையில்,

"ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் ஆட்சியில், நடிகை ரோஜா அமைச்சராக இருந்தபோது, 'ஆடுதாம் ஆந்திரா' எனும் பெயரில் மாநிலம் முழுவதும் விளையாட்டுகளை ஊக்கப்படுத்துவதாக கூறி சுமார் 100 கோடி இந்திய ரூபா வரை ரோஜா ஊழல் செய்துள்ளார்." என்று புகார் தெரிவித்துள்ளார்.

# சீன பொருள்கள் மீதான வரிகளுக்கு காலக்கெடுவினை நீடித்தார் ட்ரம்ப்





சீனப் பொருள்கள் மீதான அமெரிக்க வரிகளை மீண்டும் அமுலுக்குக் கொண்டு வருவதை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் 90 நாள்களுக்கு நீடித்துள்ளதாக வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அந்த வரிகள், இன்று செவ்வாய்க்கிழமை மீண்டும் அமுலுக்கு வரவிருந்தன.

ஆனால், எதிர்வரும் நவம்பர் மாதம் நடுப்பகுதி வரை காலக்கெடுவை நீடிக்கும் ஒரு நிர்வாக உத்தரவில் ட்ரம்ப் இன்று கையெழுத்திட்டார் என அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

ஜூலை மாத இறுதியில் ஸ்டொக்ஹோமில் நடந்த அமெரிக்க- சீன பேச்சுவார்த்தைகளின் விளைவாக இந்த தாமதம் உத்தரவு வந்துள்ளது.

கடந்த ஏப்ரலில் ட்ரம்ப் சீன இறக்குமதிகள் மீதான முழுமையான வரிகளை 145 வீதமாக உயர்த்தியிருந்தார்.

அதற்கு பதிலடியாக சீனா, அமெரிக்கப் பொருட்களுக்கு 125 வீத வரிகள் விதித்தது.

ஆனால் ஜெனீவாவில் பேச்சுவார்த்தையாளர்கள், முதல் முறையாக சந்தித்த பிறகு, மே மாதத்தில் அந்தவரிகளில்பெரும்பாலானவற்றை இடைநிறுத்த ஒப்புக்கொண்டனர்.

அமெரிக்கா தனது வரிகளை 30 வீதமாக குறைத்தது, சீனா தனது வரிகளை 10 வீதமாக குறைத்தது என்பது குறிப்பிடத்தக்கது

# தனது நீண்ட நாள் காதலியை கரம்பிடித்தார் ரொனால்டோ



உதைபந்தாட்ட வீரரான கிறிஸ்டியோனோ ரொனால்டோ தனது நீண்ட நாள் காதலியான ஜோர்ஜினாவை கரம்பிடிக்கவுள்ளேன் என்று அறிவித்துள்ளார்.

இவர் 2016 ஆம் ஆண்டு முதல் ஜோர்ஜினா என்ற பெண்ணுடன் பழக ஆரம்பித்துள்ளார்.

இருவரும் திருமணம் செய்யாமல் வாழ்ந்து வந்துள்ளனர்.

இவர்கள் இருவருக்கும் 5 குழந்தைகள் இருக்கின்றன என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில் தனது நீண்டநாள் காதலி ஜோர்ஜினாவை கிறிஸ்டியானோ ரொனால்டோ திருமணம் செய்துகொள்ளவுள்ளேன் என்று அறிவித்துள்ளார்.

# பாலஸ்தீன அரசை அங்கீகரிப்பது பயங்கரவாதத்துக்கான வெகுமதி

## *இஸ்ரேலிய ஜனாதிபதி தெரிவிப்பு*

பாலஸ்தீன அரசை அங்கீகரிப்பதாக அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகள் அறிவித்திருப்பது, பயங்கரவாதத்துக்கான வெகுமதி மற்றும் ஜனநாயகத்தின் எதிரிகளுக்கான பரிசு என்று இஸ்ரேலிய ஜனாதிபதி ஐசக் ஹெர்சாக் கூறியுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் இந்த அறிவிப்பு ஆபத்தான தவறு, இது ஒரு பாலஸ்தீனியருக்கும் உதவாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், துரதிர்ஷ்டவசமாக



ஒரு பணயக்கைதியையும் திரும்பக் கொண்டுவராது என்றும் இஸ்ரேலிய ஜனாதிபதி சுட்டிக் காட்டியுள்ளார்.

முன்னதாக அறிவிப்பு ஒன்றை வெளியிட்டிருந்த அவுஸ்திரேலிய பிரதமர் அந்தோணி அல்பானீஸ், மத்திய கிழக்கில் வன்முறை சுழற்சியை உடைக்கவும், காசாவில் மோதல், துன்பம் மற்றும் பட்டினியை முடிவுக்குக் கொண்டுவரவும் இரண்டு நாடுகள் தீர்வே மனிதகுலத்தின் சிறந்த நம்பிக்கை என்று குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை இஸ்ரேலிய தாக்குதலால் கொல்லப்பட்ட அல் ஜசீரா செய்தியாளர்கள் இன்று அடக்கம் செய்யப்பட்டபோது காசாவில் பெரும் கூட்டம் கூடியிருந்தனர்.

பக்கங்கள் 03

கனடா முரசு

செவ்வாய்க்கிழமை | 12/08/2025

## ஸ்காப்ரோ பகுதியில் கத்தி குத்தில் 2 பேர் காயம்

கனடாவின் ஸ்கார்பரோவில் இடம்பெற்ற கத்திக்குத்து சம்பவமொன்றில் இரண்டு ஆண்கள்காயமடைந்துள்ளனர்.

இவ்வாறு காயமடைந்தவர்கள் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட் C02▶




# அமெரிக்கப் பயணத்தை தவிர்க்கும் கனேடியர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு

**அமெரிக்கப் பயணத்தைப் கனேடியர்கள் புறக்கணிப்பது, தொடர்ந்து ஏழு மாதங்களாக தொடர்கிறது.**

**அமெரிக்காவுக்கு கார் மூலம் சென்று திரும்பும் கனேடியர்கள் எண்ணிக்கை கடந்த ஆண்டை ஒப்பிடும்போது, ஜூலை மாதத்தில் 36.9 சதவிதம் குறைந்துள்ளது.**

**அத்துடன், விமானம் மூலம் அமெரிக்காவுக்குச் சென்று திரும்பும் கனேடியர்கள் எண்ணிக்கையும் கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தை ஒப்பிடும்போது 25.8 சதவிதம் குறைந்துள்ளது.**

மொத்தமாக பார்த்தால், கடந்த ஆண்டில் 2.6 மில்லியன் கனேடியர்கள் அமெரிக்கா சென்று திரும்பிய நிலையில், இந்த ஆண்டு 1.7 மில்லியன் பேர் மட்டுமே அமெரிக்கா சென்று திரும்பியுள்ளார்கள். ட்ரம்பின் எரிச்சலூட்டும் நடவடிக் கைகளால் அமெரிக்காவைப் புறக்கணிக்கும் கனேடியர்கள் எண்ணிக்கை 2025 ஆம் ஆண்டின் துவக்கத்திலிருந்து தொடர்ச்சியாக அதிகரித்துவருவ தையும் தரவுகள் மூலம் தெரிந்துகொள்ள முடிகிறது..

# டொரோண்டோவில் வெளவால்களால் நேய்கள் பரவும் அபாயம் அதிகரிக்கின்றது

கனடாவின் டொரோண்டோவின் வடகிழக்கு பகுதியில், வெளவால்களுடன் தொடர்புடைய நோய்கள் அதிகளவில் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த கோடை காலத்தில் வெளவால் காரணமாக ஏற்படக்கூடிய நோய்கள் தொடர்பில் பொது சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

வெளவால்கள் ஊடாக ராபீஸ் நோய் பரவும் அபாயம் காணப்படுவதாக பொதுச் சுகாதார அலுவலகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வெளவால்களை பிடிக்க முயற்சிக்கும் போது அவை கடிப்பதனால் நோய்கள் ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



இதனால் மக்கள் அவதானமாக இருக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வெளவால் கடிக்க இலக்கானால் பாதிக்கப்பட்ட இடத்தை சவார்க்காரம் இட்டு நன்றாக கழுவ வேண்டுமென தெரிவிக்கப்படுகின்றது.

உரிய முறையில் சிகிச்சை பெற்றுக்கொள்ளத் தவறினால் உயிராபத்தைக் கூட ஏற்படுத்தக் கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# கனடாவிற்குள் சீஸ் ரின்கள் மூலமாக போதைப் பொருள் கடத்தியவர் கைது

கனடாவிற்குள் சீஸ் ரின்களில் போதைப் பொருள் கடத்திய ஒருவரை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

ஜமைகாவிலிருந்து கனடாவின் பியர்சன் விமான நிலையத்திற்கு வந்த ஒரு பயணியே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சுமார் 2 மில்லியன் கனேடிய டொலர் மதிப்புள்ள கோக்கெய்ன் போதைப் பொருள் அந்த நபரிடமிருந்து மீட்கப்பட்டுள்ளது.

அந்த நபர், பதப்படுத்தப்பட்ட சீஸ் டப்பாக்களில் மறைத்து போதைப் பொருள்களை கடத்த முயன்றார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சுமார் 18 கிலோ கிராம் எடையுடைய கொக்கேய்ன் போதைப் பொருள் மீட்கப்பட்டதாக கனடிய எல்லைப் பாதுகாப்பு முகவர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

சந்தேக நபர் மேலதிக விசாரணைக்காக பொலிஸாரிடம் ஒப்படைத்ததாக எல்லைப் பாதுகாப்பு முகவர் நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் மீட்கப்பட்ட போதைப் பொருள்களும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




## ஸ்காப்ரோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த தாக்குதல் சம்பவம் எங்கு இடம்பெற்றது என்பது குறித்த துல்லியமான தகவல்கள் வெளியிடப்படவில்லை.

ஆனால் மார்னிங்சைடு அவென்யூ மற்றும் பிஞ்ச் அவென்யூ கிழக்கு பகுதியில் உள்ள ஒரு எரிவாயு நிலையத்திற்கு வெளியே பொலிஸ் ஒரு பகுதியை மூடியுள்ளது.

சம்பவத்தில் சுமார் 20 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவர் கடுமையான காயங்களுக்கு உள்ளான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என தெரிவிக்கப்படுகின்றது.

மற்றுமொரு நபர் சிறு காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் மருத்துவமனையில் அஅனுமதிக்கப்படுள்ளார்.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் இதுவரையில் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.